# விண்ணொளி

---

CACM கொழும்புச் சபையின் சஞ்சிகை 4.4.2021 சபைமக்கள் மற்றும் நண்பர்களுக்கானது

---

<u>சபைப் போதகரின் செய்தி</u>

## *எமது வாழ்வு மீண்டும் துளிர்க்கும்*

இன்றைய சூழல் மிகவும் ஆபத்தானது என்று உணரப்படுகிறது. சூறாவளிகள் பல மனித மனங்களில் வீசிக் கொண்டிருக்கிறது. கட்டுப்பாடுகளுடன் ஈசன் உயிர்ப்பைக் கொண்டாட வேண்டிய ஒரு சூழல். "இந்நிலை மாறுமா?" இது தான் ஒவ்வொருவரது கேள்வியும். நிச்சயம் மாறும் என்பதே உயிர்ப்பின் ஆண்டவர் எமக்கு அருளுகின்ற நற்செய்தி. ஏனெனில் கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறில் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த நாம், இவ்வருடம் ஆலயஞ் சென்று வழிபாடு செய்ய வழி கிடைத்துள்ளதே. நிச்சயம் உயிர்த்த ஆண்டவர் கிரியை செய்கிற வராக இருக்கிறார்.

ஒரு சூறாவளிக் காற்று கடந்து போனபின் ஒரு மலர் சோர்வுற்றது போல வளைந்து தொங்கிக் கொண்டிருக்கும் விதத்தை நாங்கள் கவனித்தால், ஒரு வகையில் அது மனதை நெகிழச்செய்யும் காட்சியாக இருக்கிறது. மொத்தத்தில், கடுமையான இடி மின்னல் மழை எந்த ஒரு மலரையும் விட அதிக வலிமையுள்ள எண்ணற்ற விலங்குகளையும் மனிதர்களையும் மறைவிடம் நோக்கி விரைவாக ஓட வைத்திருக்கும். என்றாலும், அந்த மலர் அங்கே வேரூன்றியதாய், வானிலையின் முழு ஆவேசத்தையும் எதிர்த்து, நின்று கொண்டிருக்கிறது. இப்பொழுது, இங்கே சேதமடையாமல், வளைந்தாலும் முறிந்துவிடாமல், அதனுடைய மென்மையான தோற்றத்துக்கு முரணாக இருக்கும் வலிமையைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அதை வியந்து நோக்கும் போது, அது மீண்டும் வலிமை பெற்று மறுபடியும் ஒரு முறை அதன் அழகான தலையை ஆகாயத் தை நோக்கி உயர்த்துமா என்பதாக நாங்கள் ஒருவேளை யோசிக்கலாம்.

மனிதர்களைப் பொறுத்தளவிலும் இப்படியே இருக்கிறது. இந்தத் துன்பமான காலங்களில், நாம் எல்லா வகையான சூறாவளிகளையும் எதிர்ப்படுகின்றோம். பொருளாதார கஸ்டங்கள், மனச்சோர்வு, உடல்நலக் குறைவு, அன்பான ஒருவரின் இழப்பு, ஏன் அண்மையில் நாம் எதிர் கொண்டுள்ள கொரோனாப் பிரச்சனை...இப்படிப்பட்ட மனக் கொந்த ளிப்புகள் ஏதாவது ஒரு சமயத்தில் நம் அனைவரையும் தாக்கத்தான் செய்கின்றன, சில சமயங்களில் மலர் எவ்விதமாக வேரோடு தன்னைப் பிடுங்கிக்கொண்டு மறைவிடம் நோக்கி ஓடமுடியாதோ அவ்விதமாவே அவற்றை நம்மால் தவிர்க்க முடியாது.

மிகவும் பலவீனமாகத் தோற்றமளிக்கும் தனிநபர்கள் ஆச்சரியமான பலத்தைக் காண்பித்து இப்படிப்பட்ட பலமான தாக்குதல்களைச் சகித்துக்கொண்டிருப் பதைக் காண்பது மனதை நெகிழச் செய்கிறது. (இரண்டாம் பக்கம் பார்க்கவும்)

(சபைப் போதகரின் செய்தி தொடர்கிறது)

அவர்கள் எவ்விதமாக அதைச் செய்கிறார்கள்? சுகவீனத்துக்கு மேல் சுகவீனம், பெலவீனத்துக்கு மேல் பெலவீனம்... ஆனாலும் விசுவாசத்துடன் வாழ்க்கையை ஓட்டும் எத்தனை பேரை நாம் காண்கிறோம். அநேகமாக இதற்கு இன்றியமையாதது விசுவாசமாகும். இயேசுகிறிஸ்துவின் ஒன்று விட்ட சகோதரன் யாக்கோபு எழுதினார்: "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாக எண்ணுங்கள்."— யாக்கோபு 1:3

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.(பிலிப்பியர் 4:6-7).

நாம் நம் பிரச்சனைகளை கர்த்தருக்கு தெரிவித்து விட்டபின், நிச்சயமாக எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் எங்கள் இருதயம் நிறைந்திருப்பதை உணரமுடியும். என்னதான் புயல் வரட்டும், என்னதான் கடல் கொந்தளிப்பை போன்று வாழ்க்கையில் பிரச்சனைகள் வந்தாலும், நமக்கு சமாதானத்தையும், சந்தோசத்தையும் கொடுக்கிற தேவன் நமக்கு உண்டு. ஆகவே சோர்ந்து போய் விட வேண்டாம்.

எல்லாவற்றிற்கும் நிச்சயமாகவே ஒரு முடிவு உண்டு. அதை நன்மையாக மாற்றும் தேவன் நமக்கு உண்டு. புயலின் மத்தியிலும் ஒரு அமைதி சமாதானம் நிச்சயமாகவே நமக்கு தருகிற தேவன் நமக்கு இருக்கும் போது, நாம் எதை குறித்தும் கலங்க தேவையில்லை!

**தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.** (யோவேல். 2 : 21)

**கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப் போலிருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்** - (ஏசாயா 25:4)

உயிர்த்த ஆண்டவரில் விசுவாசம் வைப்போம். உயிர்த்த ஆண்டவர் எம்முடன் எப்போதும் இருப்பதால் எமது வாழ்வு நிச்சயம் மீண்டும் துளிர்க்கும்.

**- அருட்திரு A. B. தேவதாஸ், சபைப் போதகர்.**

---

# வெறுமையான கல்லறை

பொருட்காட்சிகள், புத்தகக் கண்காட்சிகளுக்கு நாம் போயிருக்கும் போது பொதுவாக வரிசையில் முன்னால் போகும் பார்வையாளர் நமக்கு உதவிக்குறிப்புகள் கூறுவது வழமை. அதுபோல எமக்குப் பின்னால் வருபவருக்கு நாம் Tips கொடுத்திருக்கும் அனுபவமும் எமக்கிருக்கும்.

எருசலேம் நகருக்குச் சுற்றுலா சென்றிருந்த ஒருவர் தமது அனுபவத்தை எழுதியிருந்தார். தாம் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் இடங்களை ஒவ்வொரு இடமாகச் சென்று பார்வையிட்டுக் கொண்டிருந்தாராம்.

இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை வைத்த இடத்தை அதாவது இயேசுவின் கல்லறையைப் பார்க்கச் சென்றிருந்தபோது கல்லறையைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த ஒருவர் இவரிடம் 'அங்கே எதுவுமில்லை' என்றாராம். உடனே இவர் அவரிடம் **'எதுவும் இல்லாமல் வெறுமையாக இருப்பதால்தானே நீரும் நானும் இங்கே வந்திருக்கிறோம்'** என்றாராம்.

**'அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.'**
**- லூக்கா 24:6.**

**வேதாகமத்தில் நாம் காணும்**

# பெண்களின் ஜெபவாழ்வு

*(மாா்ச் எட்டாம் திகதி கொண்டாடப்படும் சர்வசே மகளிர் தினத்தையொட்டி கடந்த 14.3.2021 ஞாயிறு காலை வழிபாடு நமது திருச்சபைப் பெண்களினால் நடத்தப்பட்டது. அவ்வழிபாட்டில் திருமதி ஜீவனம் வொட்சன் அவர்கள் ஆற்றிய அருளுரையை இங்கே பதிவிடுகின்றோம்.)*

இன்று சர்வதேச மகளீா் தினம். அத்துடன் சென்ற வாரம் நாம் உலக ஜெபநாளை அனுசரித்தோம். கடவுள் நமக்கு கொடுத்த விசேட பண்புகளுக்காக பெண்களாகிய நாம் அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். கிறிஸ்தவ பெண்கள் நமது குடும்பங்களிலும், திருச்சபையிலும் எமது சமூகத்திலும் நாட்டிலும் பல பொறுப்புக்களை பெற்றுள்ளோம். எனவே நாம் எமது பங்கை திறம்பட செய்ய எமது நாதா் இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். ஆகையால் எமது வாழ்வு ஒரு முன்மாதிரியாகவும் மற்றவர்களை வழிநடத்துவதாகவும் அமையவேண்டும். எமது ஜெப ஜீவியமே இதற்கு வழிவகுக்கும்.

ஜெபம் என்பது நாம் ஒரு இடத்திலிருந்து ஏறெடுப்பது மட்டுமல்ல. நாம் எமது வேலைகளின் மத்தியில், பிரயாணம் செய்யும் வேளையில், ஏன் சடுதியாக எதிா்நோக்கும் எதிா்ப்புகள் சவால்களின் போது எமது ஒரு வார்த்தை ஜெபமாக அமையும். எனவே எமது வாழ்வில் ஜெபத்தில் எப்போதும் தரித்திருக்க நாம் பழக வேண்டும்.

வேதாகமத்தில் பல பெண்களின் ஜெபவாழ்வைப் பற்றி கூறப்பட்டுள்ளது. நாம் ஒரு சில உதாரணங்களை இன்று தியானிப்போம்.

**எலிசபேத்**
இவர் பல ஆண்டுகளாக பிள்ளையில்லாமல் சமுதாயத்தினால் ஏற்கப்படாத ஒருவராக வாழ்ந்து வந்தார். ஆனாலும் அவரும் அவரது கணவர் சகரியாவும் தேவபக்தி நிறைந்தவர்களாக இருந்தனர். ஆண்டவரின் கிருபையினால் காலம் சென்ற போதும் ஒரு குமாரனைப் பெற்றனர். மரியாள் எலிசபேத்திடம் வந்த போது "ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என மரியாளை எலிசபேத்து வாழ்த்தியதை லூக்கா 1 : 42ல் காண்கிறோம். அவர்களின் மகனான யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் முன்னோடியாக சிறப்புப் பெற்றார்.

**கிறிஸ்துவின் தாயாகிய மரியாள்**
இவர் இன்னொரு விதமான வேதனையை அனுபவித்தார். விவாகமாக முன்னரே பரிசுத்தாவியினால் கா்ப்பம் தரித்து மக்கள் மனதில் கேள்விக்குறியாக விளங்கினார். ஆனால் அவர் மற்றவர்களின் கருத்துக்களைக் குறித்து கலங்காமல் தேவன் தனக்கு கொடுத்த வாக்கை நினைத்து "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது" என்று உறுதியாக கடவுளின் செயல்களை அறிந்திருந்து அவர் செயல்கள் மாறாதவை என்பதை நினைந்து கடவுளில் தரித்திருந்தாள்.

**தீர்க்கதரிசியான அன்னாள்**
அன்னாள் இளமையாக மணமாகி சிறிது காலத்திலேயே கணவனை இழந்து விதவையாக வாழ்ந்தார். 84 வயதுடைய அவா் தேவாலயத்திலேயே தனது வாழ்வை உபவாசத்திலும் ஜெபத்திலுமே செலவளித்தார். கவலை கஷ்டத்தின் மத்தியிலும் தனது மனதை கலங்கவிடாது மனநிலையை உறுதியாக கடவுளில் நிலைத்திருந்து காலத்தை கழித்தார். இயேசுவை தேவாலயத்திற்கு கொண்டுவந்தபோது அவரைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார். இதனை லூக்கா 2: 36 - 38 பார்க்கிறோம்.

**கானானிய ஸ்திரி**(மத்தேயு 15: 22 – 28)
இஸ்ரவேலல்லாத பெண்ணாக இருந்தும் அவரின் விசுவாசம் உறுதியாக இருந்தது. தனது உண்மை நிலையை அறிந்து தன்னை தாழ்த்தி இயேசுவிடம் திறந்த மனதுடன் தனது நிலையை விளக்கினார். ஒரு வார்த்தை சொல்ல என் மகள் குணமாவாள் என்ற உறுதியுடன் அவள் இயேசுவை அணுகுவதை சீஷா்கள் தடைசெய்த போதும் விட்டு விலகாது இயேசுவின் பாதத்தில் நிலைத்து நின்றதால் பலன் கிடைத்தது. அவரது மகள் குணமானாள்.

**பெத்தானியா ஊராளான மகதலேனா மரியாள்**
இவளின் விசுவாசம் நிலையானது. இயேசுவை சுற்றி இருந்தோர் இவளை ஒரு தொந்தரவாக கருதினர். ஆனால் அவளோ இயேசுவின் பாதத்தை பரிமளதைலத்தால் முத்தம் செய்தாள். (***4ஆம் பக்கம்)***

***(வேதாகமத்தில்...3ஆம் பக்கத் தொடர்ச்சி)*** அவளின் செயலே ஒரு ஜெபமாக அமைந்தது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனம் அவருக்கு கிடைத்தது

பழையேற்பாட்டில் இரு பெண்களைப் பற்றி தியானிப்போம்.

**அன்னாள்**

காலாகாலமாக தனக்கு பிள்ளை பாக்கியம் கிடைக்க வேண்டி ஆலயத்தில் ஜெபத்திலேயே தரித்திருந்தாள். அவள் ஜெபத்தில் தரித்திருக்கும் போது பிழையாக கணிக்கப்பட்டாள். ஆனால் மகப்பெறு பெற்ற போது சாமுவேலை ஆலயத்திலேயே கொண்டுபோய் விட்டாள். அவளது நன்றி மனதை நாம் இதிலிருந்து அறியலாம்.

**எஸ்தர் மகாராணி.**

அரண்மனையில் இருந்தபோதும் தனது ஜனம் பாதிக்கப்படுவதை தடை செய்வதற்காக ஜெபத்தோடும் உபவாசத்தோடும் அவர்களோடு தரித்திருந்தார். சமுதாயமே பாதுகாக் கப்பட்டதோடு தீங்கு விழைவிக்க நேர்ந்த ஆமான் மடியவேண்டிய நிலை ஏற்பட்டது. ஜெபத்தின் வல்லமை எவ்வளவு மகத்துவ மானது என நாம் இதிலிருந்து அறிகிறோம்.

எமது தேசமும் உலகம் முழுவதுமாக இப்போது நாம் இந்நிலையிலேயே இருக்கிறோம். மனிதனின் தீய செயலு க்குள் நாம் எல்லோரும் தள்ளப்பட்டு ள்ளோம். எமது சபை ஜெபத்தினால் பல விடயங்களுக்கு தீர்வு கண்டுள்ளது. எனவே நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந் தும் எமது சபையின் ஜெப நிலையை வலுப்படுத்தவேண்டும். என் நாமத்தினால் ஒன்று கூடுவோருக்கு விடை அருளுவேன் என்று கூறிய ஆண்டவர் எம்மை கைவிட மாட்டார். பெண்களுக்கு வலிமையை கொடுக்கின்ற தேவன் ஜெப ஆவியையும் தந்துள்ளார். தேசமே பயப்படாதே எழும்பி பிரகாசி. நாம் அறிந்ததை விட பிறநாடுகளில் இருப்போர் எமது நாட்டிற்கு ஏற்படப்போகும் நிலையை குறித்து கவலை தெரிவிக்கின்றனர். ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. எமது ஜெபத்தினால் எமது நாட்டிற்கு ஏற்படக்கூடிய பயங்கர நிலையிலிருந்து பாதுகாக்க நாம் கடவுளிடம் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும்.

நாம் சிறுவர்களாக இருந்த வேளையில் குடும்ப ஜெபம் ஒரு முக்கிய இடத்தை வகித்தது. ஆனால் இப்போது குடும்பம் ஒருமித்து கூடுவதே கஷ்டமாக இருக்கின்றது. எனவே குடும்ப பெண்களே இதற்காக நேரம் குறிக்க வேண்டும்.

A family that prays together stays together. இந்த கூற்று மிக உண்மை யானது. இன்றைய காலத்தில் பல குடும்பங்கள் நிலைகுலைந்து போவதைத் தடுப்பதற்கும் ஜெபம் அத்தியவசியமாக அமைகின்றது. கொரனா காலங்களில் பல குடும்பங்கள் ஒன்றாக நேரம் செலவழிக்க கூடியதாக இருந்தது. கடவுள் நாம் இழக்கும் தருணங்களை எமக்கு உணர்த்த இதனை உபயோகித்துள்ளார்.

நான் எனது சாட்சியை பகிர விரும்புகிறேன். எனது வாழ்க்கையில் சில கஷ்டத்தினூடாக செல்கின்ற வேளையில் எனது அம்மா எனக்கு ஜெப வழிகாட்டி யாக இருந்தார். அவர் எனக்கு ஸ்தோத்தி ரத்தோடு ஜெபிக்க கற்றுத்தந்தார். அவர் எனக்கு எழுதும் கடிதங்களின் முழு பாகமும் கடவுள் எனக்கு தந்த ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் எழுதி அதற்கு ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார். நாட்கள் செல்ல என்னை அறியாமலே நானும் கஷ்ட நேரத்திலும் நன்றி கூற பழகினதினால் எனது மனப்பாரங்கள் ஒடி மறைந்துவிட்டன. அத்துடன் அவர் சிட்னியில் இருந்ததால் ஒரு நேரத்தைக் குறித்து இருவரும் ஜெபிப்பது உண்டு. ஈவை எண்ணு சொல்லி ஒவ்வொன்றாய் அப்போ தேவ ஈவு ஏராளம் என்பாய் என்பதன் அர்த்தத்தை முற்றாக அறிந்தேன்.

நான் இப்போ இருக்கின்ற இடத்தை நாங்கள் வாங்கும் நோக்கம் எமக்கு இருக்கவில்லை. வாடகைக்காக கேட்டபோது அவர்கள் தாங்கள் விற்கப்போவதாக கூறி ஒரு வாரத்தில் எம்மை மறுமொழி கூற சொன்னார்கள். எனவே எனது தாயாரும் சகோதரரும் தாம் உதவி செய்வதாக கூறி நாமும் எடுக்கக் கூடிய கடன்களையும் கணித்த போது இன்னமும் பணம் தேவையாக இருந்தது. புதன்கிழமை நான் வேலைக்கு சென்ற போது ஒரு மாதா என்னிடம வந்து தான் தனது சகோதரியுடன் ஜெபிக்கச் செல்வதா கவும் எனக்கு எதாவது ஜெப விண்ணப்பம் உண்டா என்று கேட்டார். நான் எனது தேவையை கூறினேன். அடுத்த நாள் காலை நான் வேலைக்கு போகும் போது அவர் எனக்காக காத்திருந்தார். உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப் படுகிறது என்று நான் அறியலாமா? ஏன்று கேட்டார். நான் சொன்னபோது அவர் கூறியதாவது 'நான் ஒருவருக்கு கடன் கொடுத்திருந்தேன் அது ..

**(5ஆம் பக்கம் பார்க்க)**

*(வேதாகமத்தில்...4ஆம் பக்கத் தொடர்ச்சி)*

எனக்கு திரும்பக் கிடைக்கும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் அவர் அப்பணத்தைத் திரும்பத் தந்துவிட்டார். நேற்று நாங்கள் ஜெபித்தபோது என் சகோதரி 'கடவுள் உதவி செய்வதற் காகவே இதைத் திரும்பக் கிடைக்கச் செய்துள்ளார். எனவே அவரின் தேவையை அறிந்து பாருங்கள். வசதியான வேளை அவர் கட்டாயம் திரும்பத்தருவார் என்று சொன்னார்' என்றார். அவருக்கு கிடைத்த அதே தொகையே எனது தேவையாக இருந்தது. எனவே அவர் இது கடவுளின் ஒழுங்கு என்று உறுதி செய்து எனக்கு தேவையான வேளையில் தந்து ஒரு வாரத்திற்குள்ளேயே நாம் எல்லா ஒழுங்குகளையும் செய்ய ஆண்டவர் கிருபை செய்தார். நினையாத பிரகாரமாக எமக்கு சொந்தமான வசிப்பிடம் அமைந்தது அவருக்கே எல்லா கனமும் மகத்துவமும் உண்டாவதாக. இச்சம்பவம் என் வாழ்க் கைக்கு ஆணித்தரமான நம்பிக்கையையும் ஜெபத்தின் வல்லமையையும் அனுபவிக்கத் தக்கதாக அமைந்தது.

எனது உலகப் பிரகாரமான குறைகள் யாவும் ஆண்டவரின் பார்வையில் அற்பமும் குப்பையுமென அறிந்து கொண்டேன். எனது மனம் தேவையற்ற வார்த்தைகளை கேட்கும் போதும் கலங்கத் தேவையில்லை ஆண்டவர் எல்லாவற்றையும் அறிவார் என்ற உறுதி கொண்டேன்.

எமது திருச்சபை வாழ்வில் நாம் ஜெபத்தின் வல்லமையை அனுபவித் துள்ளோம். நாம் வழிபடும் இத்தலம் அதற்கு ஒரு நல்ல உதாரணம். ஆகவே நாம் மேலும் மேலும் ஜெபத்தினால் எம்மையும் திருச்சபையையும் எமது சூழலையும் விசேடமாக எமது நாட்டையும் தாங்கவேண்டும்.

பெண்கள் வேலைக்குச் சென்று உழைத்தாலும் குடும்பத்தின் தூணாக விளங்கி வீட்டு வேலையையும் செய்து கணவனுக்கு ஏற்ற மனைவியாகவும் பிள்ளைகளுக்கு அன்புத் தாயாகவும் சமுகத்தில் கலங்கரை விளக்காகவும் விளங்க கடவுள் வரம் கொடுத்துள்ளார்.

எனவே நாம் அவரில் நிலைத்திருந்து ஜெபத்தில் தரித்து பெலனைப் பெற்று சபையின் காரியங்களிலும் வெற்றிகாண அவர் அருள் தருவாராக.

---

**இணையத்தளத்தில் இதயம் கவர்ந்தது**

# தோடம்பழமும் நாத்திகனும்

**ஒ**ரு நாத்திகன்.... கடைந்தெடுத்த நாத்திகன்..... மேடையில் நின்று பிரசங்கிக்கிறான். அவன் உரை அனைவரையும் கட்டிப்போட்டுவிடும் என அவன் நண்பர்கள் கூறுவர். கடவுள் இல்லை, வேதம் இல்லை, எல்லாம் பொய். அவை மதத்தலைவர்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக உண்டாக்கியவை என்று திறமையாக, சாதுரியமாக பிரசங்கித்துக்கொண்டிருக்கிறான். திரள் திரளாக ஜனக்கூட்டம் பார்த்துக்கொண்டிருந்தது.

கடைசியாக 'கடவுளுமில்லை கத்தரிக்கா யுமில்லை, எல்லாம் பித்தலாட்டம்' என்று சொல்லி முடித்து, 'யாராவது கேள்வி கேட்க வேண்டுமானால் மேடைக்கு வரலாம்' என அறிவித்தான்.

அந்நகரில் தன் இஷ்டப்படி வாழ்ந்த சண்டியன் ஒருவன் - மனந்திரும்பி கிறிஸ்தவனானவன் - மேடைமீது ஏறினான்.

தனது கோட் பையிலிருந்து ஒரு தோடம்பழத்தை எடுத்து நிதானமாக உரிக்கத் தொடங்கினான். 'கேட்க வந்த கேள்வியைக் கேட்காமல் பழத்தை உரித்துக்கொண்டிருக்கிறாயே' என கோபங்கொண்டான் நாத்திகப் பேச்சாளன். பழத்தை உரித்துக்கொண்டிருந்தவன் 'அவசரப்படாதே' என்று கூறி ஒவ்வொரு சுளையாக ரசித்து ரசித்துச் சாப்பிட்டான்.

சாப்பிட்டு முடித்தபின், 'எப்படி தோடம்பழம் இனிப்பாக இருந்ததா?' எனக் கேட்டான். 'மூடனே, முழுப்பழத்தையும் நீதானே சாப்பிட்டாய். இனிப்பா புளிப்பா என நான் எப்படிச் சொல்லமுடியும்' என்றான் நாத்திகன் அகங்காரமாக.

'கடவுள் நல்லவர் என்பதை நீ ருசித்துப் பார்த்தால்தானே உனக்குத்தெரியும்! ருசித்துப்பார்க்காமல் ஏன் உளறிக்கொண்டு கூச்சலிடுகிறாய?' என்று இவன் சொல்ல மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

நாத்திகன் தலையைக் குனிந்தவாறு மேடையிலிருந்து இறங்கிச் சென்றான்.

**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். — சங்கீதம் 34 : 8.**

# HOLY WEEK IN THE FOUR GOSPELS

| MATTHEW | MARK | LUKE | JOHN |
|---|---|---|---|
| **Chapter 26**<br>1-5 – Two days before Passover<br>Prediction and plot to kill<br>6-13 – Anointing at Bethany<br>14-16 – Judas' plot to betray<br>17-25 – Passover celebration<br>26-30 – Lords supper<br>31-35 – Peters denial predicted<br><br>**Chapter 27**<br>1-2 – To Pilate<br>3-10 – Judas hung himself<br>11-14 – Lord Jesus faces Pilate<br>15-26 – Barabbas<br>27-31 – Soldiers mock Lord Jesus<br>32-44 – King on the cross<br>45-54 –Darkness, earthquake, Graves opened, Lords cry, Elijah expected, death, Veil torn, Centurion, amazed.<br>55-56 – Women present<br>57-66 – Burial<br>62-66 – Tomb made secure<br><br>**Chapter 28**<br>1-8 –Mary Magdalene and the other Mary at the tomb.Earthquake, Angel rolled the stone, guards shook for fear of angel. "Fear not" said the angel , " come see the place, He is risen. Tell the disciples He is going to Galilee.<br>9-10 – Jesus appeared to them and said the same words as the angel.<br>11-15 – Guards were bribed to lie<br>16-20 – Great Commission . | **Chapter 14**<br>1-2 – Two days before Passover Plot to kill after Passover<br>3-9 – Anointing at Bethany<br>10-11 – Judas' plot to betray<br>12-21 Passover celebration<br>22-26 – Lords supper<br>27-31 Peters denial predicted<br>32-42 – Gethsemane<br>43-50 – betrayal and arrest<br>66-72 – Peters denial<br><br>**Chapter 15**<br>1-5 – Lord Jesus faces Pilate<br>5-15 – Barabbas<br>16-20 – Soldiers mock Lord Jesus<br>21-32 – King on the cross<br>33-41 – Darkness, Lord's cry, Elijah expected, death, veil torn, Centurion amazed.<br>40-41 Women present<br>42-46 – Lords body laid to rest and stone rolled over.<br>47 – Mary (2) watched the place.<br><br>**Chapter 16**<br>1-8 – The Empty tomb<br>9-11 – Lord Jesus appeared to Mary Magdalene and sent her to announce to the disciples, ' I have seen Jesus' but they did not believe her.<br>12-13 – Lord appeared to two disciples.<br>14-18 – Great Commission<br>19-20 – He ascended to God's right hand. | **Chapter 22**<br>1-6 – Plot to kill<br>7-13 – Preparation for Passover<br>14-23 – Lord's Supper<br>24-30 – argument over greatness<br>31-34 – Peter's denial predicted<br>35-38 – Prophecy revealed<br>39-46 – At Gethsemane<br>47-53 – Betrayal and arrest<br>54-62 – Peter's denial<br>63-64 – Guards mock<br>66-71 – Before Priests and elders<br><br>**Chapter 23**<br>1-5 –Lord Jesus before Pilate<br><br>6-12 – Before Herod<br><br>13-25 – Barabbas<br><br>26-43 – King on the cross<br><br>44-49 – Death<br>50-56 – Burial<br><br>**Chapter 24**<br>1-12 – Women at the tomb. Two angels appear and gives them the message that Jesus has Risen.<br>Peter went to the tomb.<br><br>13-35 – On the road to Emmaus.<br><br>36-49 – Lord appears again to the disciples He opened their minds so that they could understand the Scriptures.<br><br>50-52 – The Ascension. | **Chapter 18**<br>1-11 – Betrayal and arrest<br>12-14 – Before High Priest<br>15-18 – Peter's denial<br>19-24 – questioned by High Priest<br>25-27 – Peter denies twice more<br>28-38 – Lord Jesus before Pilate<br>39 – 40 – Barabbas<br><br>**Chapter 19**<br>1-4 – Soldiers mock<br>5-16 – Plate decides<br>17-24 – King on the cross<br>25-27 – Mother and John<br>28-30 – Thirst/It is finished<br>31-37 – Death confirmed<br>38-42 – Burial<br><br>**Chapter 20**<br>1-9 – Empty tomb witnessed by Mary Magdalene, Peter and John.<br><br>10-18 – Mary Magdalene meets the Lord Jesus<br><br>19-23 – Lord Jesus appears to the disciples.<br><br>24-29 – Lord appears to Thomas<br><br>30-31 – Reason John wrote this account of the gospel.<br><br>**Chapter 21**<br>1-14 – Lord Jesus and the miraculous catch of fish<br><br>15-25 – Lord reinstates Peter and gives him the ministry. |

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள்

## அருட்திரு A. K. சுரேந்திரன்

CACM திருச்சபையின் சிரேஷ்ட அருட்பணியாளர்களில் ஒருவரும் பண்டத்தரிப்புச்சபையின் போதகராக கடமையாற்றிவந்தவருமான அருட்திரு A. K. சுரேந்திரன் போதகர் ஐயா மார்ச் மாதம் 13ஆம் திகதியன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

சளைப்பின்றி களைப்பின்றி உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் மேய்ப்புப்பணி ஆற்றிவந்தவர் சுரேந்திரன் போதகர். அவர் பணியாற்றிய சபைகளில் சபைக்கு வெளியேயிருந்து வந்த பல நெருக்கடிகளுக்கு இறை நம்பிக்கையுடன் தைரியமாக முகம் கொடுத்தவர். பண்டத்தரிப்பு ஆலயத் திருத்தப் பணிகளை மேற்கொண்டு திருத்தப்பட்ட ஆலயத்தில் வழிபாட்டை நடத்திய சில நாட்களுக்குள்ளே பரம அழைப்பைப் பெற்றுக்கொண்டார். துயருற்றிருக்கும் போதகரம்மா, பிள்ளைகள் மற்றும் உறவுகளுக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

## டொக்டர் S. சோமசேகரம்.

நமது சபையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான டொக்டர் சோமசேகரம் அவர்கள் கடந்த மார்ச் 4ஆம் திகதியன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். 50 வருடங்களுக்கும் அதிகமான காலம் வைத்தியராகப் பணியாற்றியவர். மருத்துவப் பயிற்சி முடித்த பின்பு, புதுக்குடியிருப்பு, மாத்தளை, பொலனறுவை, மன்னம்பிட்டி ஆகிய இடங்களில் பணியாற்றியவர். மன்னம்பிட்டியில் 32 வருடம் சேவையாற்றினார். இவர் பணியாற்றிய இடங்களில் அனேகரின் அன்புக்குரியவராக விளங்கினார்.

தமது 75ஆவது வயதில் திருமுழுக்குப் பெற்ற பின்னர், “என்னை ஒருவரும் வற்புறுத்த வில்லை, நானாகவே தான் திருமுழுக்குப் பெற்றேன்” என்றார்.

மார்ச் 11ஆம்திகதி அவரது நல்லடக்க வழிபாடு கொழும்பில் நடைபெற்றது. துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தின ருக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

## திருமதி ஜீவா ரட்ணராஜா

நமது சபையைச் சேர்ந்த திருமதி தேவா ராஜ்குமார் போதகரம்மாவின் இளைய சகோதரி திருமதி ஜீவா ரட்ணராஜா கடந்த மார்ச் 7 ஆம் திகதியன்று கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாகிய இவர் கிளிநொச்சியிலிருக்கும் கருணாநிலையத்தின் மேற்பார்வையாளராக பணியாற்றியவர். அங்கு பணியாற்றிய வேளையில் ஒரு தடவை தவறுதலாக கிணற்றில் விழுந்துவிட்ட ஒரு பிள்ளையை கிணற்றுக்குள் குதித்து இவர் காப்பாற்றினார். அனைவருடனும் கலகலப்பாகவும் கரிசனையுடனும் பழகியவர். கொழும்புச்சபையிலும் அவரது சினேகிதிகள் உள்ளனர்.
கடந்த 13 ஆம் திகதி மாலை அவரது ஆத்தும இளைப்பாறுதலுக்காக நமது வழிபாட்டு ஸ்தலத்தில் ஆராதனை இடம்பெற்றது. அதே நாளில் கனடாவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்றது. அவரது பிரிவினால் துயரடைந்துள்ள அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் உறவுகளுக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

## திருமதி குளோரி ஆர்னோல்ட்

நமது சபையைச் சேர்ந்த திருமதி லைமன் மற்றும் திருவாளர் T. S. அரசரத்தினம் ஆகியோரின் சகோதரியாகிய திருமதி குளோரி ஆர்னோல்ட் அவர்கள் மார்ச் 7 ஆம் திகதியன்று லண்டனில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

## திருமதி றோசமலர் மேதர்

நமது சபையின் சிரேஷ்ட அங்கத்தவர்களில் ஒருவரும் நீண்டகால அங்கத்தவருமான திருமதி றோசமலர் மேதர் அவர்கள் மார்ச் 24 ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்பான, அமைதியான சுபாவமுள்ளவர். சபையாரைக் கரிசனையுடன் விசாரிக்கும் இயல்புடையவர்.
திருமதி றோசமலர் மேதர் கடைசிவரை நமது சிரேஷ்ட உறுப்பினர் சங்கத்தின் ஊழியங்களில் அக்கறையுடன் பங்குகொண்டவராக விளங்கினார். அவரது நல்லடக்க வழிபாடு கடந்த 26ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

# *Was she joking?*

By Isaac T. Kulendran
isaackulendran@gmail.com
*(This article first appeared in the Daily Mirror, but reprinted for the benefit of those who missed)*

I was fresh from my graduation results, when two days later, I got a job as a market research investigator. They say good things happen one after another. This job was like that.

I was sent to a remote corner of Sri Lanka, because the idea of a random sample was to get a representative picture of the entire country, not just Colombo only.

So I set out clad in my white trousers and blue shirt, which was the fashion at that time for young men. The price of the shirt was Rs 7.75. (This was in the late sixties).I had to knock at each and every door and was either welcomed heartily or thrown out as an imposter. In one such place, I was given a mixed reception. When the woman of the house saw me at a distance, she came running with difficulty, for she was not young, She came mumbling 'Ah, you have come, you have come." She was bitterly disappointed .She thought that I was her prodigal son who had left her and come back penitent. She did not hide her feelings. She told me flat, "My son had a quarrel with me about his girlfriend and went away. I thought it was he who had come back. He is also tall and had a fair complexion. But he is much better looking than you.'

Was she joking?

My next stop was in another uneducated and illiterate area where the women were impossible to interview. Whenever I went, the young women were suspicious that I was trying to get fresh with them. This was because I was young and dashing in my twenties. After finishing an interview, I had to ask the name and address of the person. The woman concerned did not understand what an address was. So I explained "When you get a letter, what do they write on the outside of the letter? To this the woman standing next to her said," She doesn't get any letters!"

Was she joking?

While doing the interviews, we had to take down the name and address of the respondents, in case the office had to check whether we in fact interviewed them. In one instance, when I asked for the name of the husband, the woman replied that she did not know her husband's name! She was adamant.

Was she joking?

No, she wasn't! I found out that in that particular community, if the husband's name was disclosed, the marriage would become invalid. No wonder the woman was adamant!

## *The never again list.*

1. Never again will I confess, “I can’t” for “I can do all things through Christ which strengthened me “.         - Philippians 4:13
2. Never again will I confess lack. For “My God shall supply all me needs according to His riches in glory by Christ Jesus”. -Phil 4:19
3. Never again will I confess fear, for “God hath not given me the spirit of fear, but of power and of love and of a sound mind. -2Tim:1:7
4. Never again will I confess doubt and lack of faith, for “God hath dealt to every man the measure of faith”. -Rom 12:3
5. Never again will I confess weakness. For “The Lord is the strength of my life”. - Psalm 27:1.
6. Never again will I confess supremacy of satan over my life, for “greater is He that is in me than he that is in the world”. - 1John 4:4
7. Never again will I confess defeat, for “God always causeth me to triumph in Christ Jesus”. -2 Cor 2:14
8. Never again will I confess lack of wisdom, for “Christ Jesus, who of God is made unto me wisdom”. -1Cor 1:30
9. Never again will *confess sickness, for “* Jesus Himself took my infirmities and bore my sickness”. -Math 8:17.
10. Never again will I confess worries and frustrations, for I am “ “casting all my cares upon Him; for He careth for me” -1 Pet5:3
11. Never again will I confess bondage, for “where the Spirit of the Lord is, there is liberty” -2 Cor3:17.
12. Never again will I confess condemnation, for “ There is therefore now no condemnation to them which are in Christ Jesus” -Rom 8:1

**(Don Gossett - 1962. )**

---

## அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவரைப்பற்றி நாம் நற்செய்தி நூல்களில் வாசிக்கிறோம். அவர் ஒரு ஆலோசனைக்காரன். யூதருடைய பட்டணங்களில் ஒன்றான அரிமத்தியாவிலிருந்து வந்தவன். உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அத்துடன் இயேசுவைக் குறித்து யூதருடைய செய்கைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் சம்மதியாதவனுமாக இருந்தான் எனவும் இயேசுவின் சீடன், கடவுளுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவன் எனவும் காண்கிறோம். இயேசுவின் சிலுவை மரணத்தைத் தொடர்ந்து பிலாத்துவினிடத்தில் போய் இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கி அதனை மெல்லிய துப்பட்டியினால் சுற்றி, தன்னுடையதும் புதியதுமான கல்லறையில் இயேசுவின் சரீரத்தை வைத்தான்.

இயேசுவின் சீடர்களெல்லாம் பயத்தினால் மறைந்திருந்த வேளை. இதற்கு முன் நாம் கேள்விப்பட்டிராத இந்த யோசேப்பு தைரியத்துடன் பிலாத்துவிடம் சென்று அவரது சரீரத்தைப் பெற்றுக்கொண்டான். இந்த நேரத்திலாவது இயேசுவுக்காக தான் எதையாவது செய்யவேண்டும் என அவன் நினைத்திருப்பான். தனது அரச பதவியில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தான் இதனைச் செய்யவேண்டும் என அவன் எண்ணியிருப்பான். அது மட்டுமல்ல தன்னுடைய – தனக்கான புதிய கல்லறையை அவன் இயேசுவின் அடக்கத்துக்காகக் கொடுத்துவிடுகிறான்.

நாம் இயேசுவுக்காக எதைச் செய்திருக்கிறோம்? எதைச் செய்யமுடியும்? என சிந்திப்பதற்கு இந்த யோசேப்பின் செயல் எம்மைத் தூண்டுகிறதாக அமைகிறதல்லவா.

# *SOCIAL PERSPECTIVE*

The people of the world can be seen to be changing from time to time, the people of this world are in such a disgusting state that man can be said to be a social animal. Among people who live with good values, we also look at many and try to make a new change in ourselves for something. It takes time to know what is good and what is Bad in the environment

We create the problem in the environment ourselves; we become a paddle less boat that cannot solve it ourselves. What are we going to face in the future? Where is the world going? We become well frogs in a state where no one can say properly. Will they stay in this country where peace, love and happiness have lasted?

God chose us to walk with him in his perfect blessing in a world that tells us to live for others, live for the welfare of others. But even this community this world teaches us many things in this world where man varies from person to person.
We too aspire to live as human beings...

We aspire to live in a human society united across religions, races and differences across many traditions such as civilizations and cultures. We know that this world carries various Creations in its palm and we are always obligated in this world to support and acknowledge our short comings....

If we step back so as not to have the bright side, we will have to see the darkness. Many have crossed the difficult path and many dark paths in their lives. May our God, who decided our path, continue to ask God to lead us in His will, and He who created us for the purpose of something will continue to bless and sustain us.

*- T.Dishan Ahay*

---

## *New Arrival*

Our members Doctors Ajanthan and Irosha were blessed with a baby boy on 17th December 2020. We congratulate the Parents and warmly welcome baby Ian Adriel into our fold.

---

## குருத்தோலை ஞாயிறு

கடந்த 28ஆம் திகதி குருத்தோலை ஞாயிறு வழிபாடு ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளால் மிகவும் கருத்துள்ள முறையில் நடத்தப்பட்டது. தற்கால குழப்பமான சூழ்நிலையிலும் மிகச்சிறப்பாக பயிற்றப்பட்டு பாரம்பரிய முறைகளில் இவ்வழிபாட்டை நடத்திய பிள்ளைகளுக்கும் ஆசிரியைகளுக்கும் நமது பாராட்டுகள். அன்றைய நாளின் செய்தியை பிள்ளைகளும் பெரியவர்களும் சிந்திக்கும்படி வழங்கினார் அருட்திரு V. ராஜ்குமார் போதகர் ஐயா.

---

# Read God's Word

God's Word is like seed, it is filled with potential.
An amazing thing happens when you study the scriptures. Your mind illuminates, your heart resonates and the Truth comes to life in you. The following happens when you read the Bible:

1. Creates faith.
2. Produces change.
3. Causes miracles.
4. Heals hurts.
5. Builds character.
6. Transforms circumstances.
7. Imparts joy.
8. Overcomes adversity.
9. Defeats temptation.
10. Builds hope.
11. Releases power
12. Cleanses minds.
13. Brings things into being.
14. Guarantees your future.

*God's Word is the Spiritual nourishment you need to fulfill your life's purpose. Bible describes it as:*

** Milk 1Peter 2:2*
** Bread Mathew 4:4*
** Solid food 1Corinthians 3:2*
** Sweet dessert Psalm 119: 103.*
*This 4 course meal is Spirit's menu for daily strength and growth.*

***Jesus** said: if you abide in My Word, you are my Disciples indeed – John 8: 31.*

*-Vasanthi Rajaratnam*

# *மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்*

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் 2020 ஜனவரி வரை பணியாற்றி ஓய்வுபெற்ற, சிரேஷ்ட அருட்பணியாளர் அருட்திரு வரத்துங்கம் ராஜ்குமார் அவர்களும் போதகரம்மாவும் இப்பொழுது நமது கொழும்பு சபையின் அங்கத்தவர்களாக வந்திருப்பது மகிழ்ச்சி தரும் விடயம். 2020 பெப்ரவரியில் அவர்கள் வந்துவிட்டனரென்றாலும் அவர்கள் கனடா தேசம் சென்று ஒரு வருடம் அங்கே தங்கியிருந்தமையால் கடந்த இதழ்களில் அவர்களை வரவேற்க இருந்த அவகாசத்தைத் தவறவிட்டுவிட்டேன்.

ராஜ்குமார் போதகர் ஓய்வுபெற்ற வேளையில் CACM இன் சிரேஷ்ட அருட்பணியாளராக விளங்கியவர். இணுவில், புங்குடுதீவு, அச்சுவேலி, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வடக்கு ஏழாலை, உடுவில்(இரு தவணைகள்), நவாலி, மானிப்பாய், அளவெட்டி(இரு தவணை கள்) ஆகிய சபைகளில் குருத்துவ ஊழியம் மற்றும் மேய்ப்புப்பணியை இறைபக்தியுடனும் அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றி ஓய்வுநிலை அருட்பணியாளனாக நம்முடன் இணைந்திருப்பது நமது சிலாக்கியம்.

ராஜ்குமார் போதகர் ஐயாவையும் அவரது அனைத்துப் பணிகளிலும் அவருக்கு உதவி செய்துவரும் போதகரம்மா திருமதி தேவா ராஜ்குமார் அவர்களையும் கொழும்புச் சபையாக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

*- பீ. என். ஜெயசீலன்*

---

## விண்ணொளியில் உங்கள் விளம்பரங்கள்

* கல்வி, இசைப்பயிற்சி, வீட்டுத்தோட்டம், சமையற்கலை, தையற் கலை, புத்தகங்கள் தொடர்பான தமது அறிவித்தல்களை சபையார் விண்ணொளி இதழ் மூலம் வெளியிட விரும்பினால் அதனைப் பிரசுரிக்க இடமுண்டு. இருபத்தைந்து சொற்கள் கொண்ட வரி விளம்பரத்துக்கு அன்பளிப்பாக 500/- ரூபா வழங்கவேண்டும். ஆசிரியரிடமோ போதகரிடமோ விபரத்தைக் கொடுத்துவிட்டு பொருளாளரிடம் அல்லது உதவிப் பொருளாளரிடம் அன்பளிப்பைக்கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பிரசுரிக்கப்படவேண்டிய விபரம் பற்றிய இறுதி தீர்மானம் சபைப் போதகருக்குரியது.

* **நான் எழுதினது எழுதினதே!**
* **நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்.**
* **மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்தான்!**

**இ**யேசு கிறிஸ்துவுக்கு மரணதண்டனை வழங்கிய தேசாதிபதியான பிலாத்து உண்மையில் அச்செயலைத் தவிர்க்க பல தடவைகள் முயற்சித்தான். ஆனால் யூதர்கள் குறிப்பாக பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள், பரிசேயர்கள் அவரைச் சிலுவையில் அறையவேண்டும் என பிலாத்துவைப் பலவந்தம் பண்ணினார்கள். இயேசுவைத் தன்னுடன் பேசுமாறு அவன் கேட்டபோது அவரும் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனாலும் அவன் அவரை விடுதலை செய்ய அதிகமாக முயன்றான். அவனது மனைவி எழுதி அனுப்பிய ஒரு குறிப்பும் அவனை மிகவும் சஞ்சலம் கொள்ளவைத்தது (மத்தேயு 27:19). பண்டிகைக்காலத்தில் கைதி ஒருவரை விடுதலைபண்ண முடியும் என்ற நடைமுறைக்கமைய அவன் இயேசுவை விடுதலை செய்ய விரும்பியும் யூதர்கள் அதற்கும் விடவில்லை.

இறுதியாக இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது அவரது சிலுவையின் மேல் **'நசரேயனாகிய இயேசு – யூதரின் ராஜா'** என எழுதிவைத்தான். இது யூதருடைய பிரதான ஆசாரியர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனை மாற்றி, அவர் தன்னை யூதரின் ராஜாவெனக் கூறினார் என எழுதும் எனக் கேட்டுக்கொண்டனர். அதற்கு பிலாத்து, 'நான் எழுதினது எழுதினதே' என்றான்.(யோவான் 19: 19 – 22) பிலாத்து, தனக்குக் கிடைத்த கடைசி சந்தர்ப்பத்தைத் தவறவிடவில்லை. இயேசுவைச் சிலுவையில் அறைவதைத் தன்னால் தடுக்கவே முடியாமற்போன போதிலும் அவரை 'யூதருடைய ராஜா' என்று பிரகடனப்படுத்தும் வாய்ப்பை அவன் தவறவிடவில்லை.

**இ**யேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த இரண்டாவது வார்த்தை பற்றிய சம்பவத்தை நாம் அனைவரும் அறிவோம். **நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்** என்று அவரிடம் வேண்டிக்கொண்டவன் ஒரு மரணதண்டனைக்குட்பட்ட கைதி. அவன் தனது தண்டனை நிறைவேற்றப்பட்டு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான். இவ்வாறான ஒரு கைதி கடவுளுடைய ராஜ்யம் குறித்து சிலுவையிலிருந்தபடி கதைக்கின்றான். அவன் தனது பாவங்களை மன்னித்தருளும் என்று கேட்கவில்லை. ஆனால் நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்று கேட்கிறான். அதாவது சிலுவையில் அறையப்பட்டிருந்த கைதியொருவன் கடவுளுடைய ராஜ்யத்தை அறிந்தவனாகவும் அறிக்கையிடுகிறவனாகவும் வாஞ்சிக்கிறவனாகவும் காணப்படுகிறான். சமூகத்தில் மிகவும் இழிவாகக் கருதப்படக்கூடிய கைதியின் நிலை இதுவென்றால் உயர் காவற்றுறை அதிகாரியான நூற்றுக்கதிபதியின் சாட்சி என்ன?

**இ**யேசு சிலுவையில் அறையப்பட்டதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களை அருகாமையில் பணியில் அமர்த்தப்பட்டிருந்த நூற்றுக்கதிபதி ஒருவன் அவதானித்துக்கொண்டிருந்தான். பூமியெங்கும் அந்தகாரமுண்டாகி, சூரியன் இருளடைந்து, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தமை, இயேசு மாகாசத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டமை ஆகிய காரியங்களை அவதானித்த அந்த நூற்றுக்கதிபதி மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்தான் என்று கூறினான். (மத்தேயு, மாற்கு)

*ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள். தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.* – **மத்தேயு 3:9.**

---

போக்குவரத்தில் மட்டுப்படுத்தல் பேணப்பட வேண்டிய நிலை காரணமாக இவ்விதழில் புகைப்படங்களைச் சேர்க்க முடியாமையை தெரிவித்துக்கொள்கிறோம். – ஆசிரியர்.